

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 59 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 23 – வியாழக்கிழமை 09 அக்டோபர் 2025 – வெளியூர் 16 + 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 59 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 23 - Thursday 09 October 2025 - Dak 16 + 16 Pages ₹ 5.00


### வருகிற சட்டமன்றக் கூட்டத் தொடரில் கண்டனத் தீர்மானம்!

# ‘காசா’ இனப் படுகொலைக்கெதிராக அனைவரும் கைகோர்ப்போம்!

## கண்டனப் பொதுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.9 -**

**“ ‘காசா’ இனப் படுகொலைக்கெதிராக அனைவரும் கைகோர்ப்போம்” என்றும் “வருகிற 14-அன்று நடைபெறவிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் தாக்குதலைக் கண்டித்தும், உடனடியாகப் போர் நிறுத்தம் தேவை என்பதை வலியுறுத்தியும், அதற்கான முயற்சியை இந்திய அரசு எடுக்கவேண்டும்” என்றும் வலியுறுத்தியும் தீர்மானம் கொண்டு வரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.10.2025) சென்னை, எழும்பூரில், காசா இனப்படுகொலைகளை கண்டித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு:-

காசா இனப்படுகொலைகளைக் கண்டித்து நடைபெறக்கூடிய இந்த கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரக்கூடிய கண்மூடித்தனமான தாக்குதல்கள், நம் எல்லோருடைய மனதை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய மனது மட்டுமல்ல, உலகத்தையே இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது.

பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களையும், ஐக்கிய நாடுகள் அவையின் கொள்கைகளையும் அப்பட்டமாக மீறும் இந்தத் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, மனிதநேய பண்போடு நம்மையெல்லாம் ஒருங்கிணைத்து இந்தக் கண்டன கூட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அமைப்பு இதை எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கிறது! எழுச்சியோடு என்று சொல்வதைவிட உணர்ச்சியோடு இதை ஏற்பாடு செய்திருக்கிறது!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.10.2025) சென்னை, எழும்பூரில், காசா இனப்படுகொலைகளைக் கண்டித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். இந்தக் கூட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தோழமைக் கட்சித் தலைவர்கள் கு.செல்வப்பெருந்தகை, மு.வீரபாண்டியன், தொல்.திருமாவளவன், எம்.எச். ஜவாஹிருல்லா, கே.ஏ.எம். முகமது அபுபக்கர், தி.வேல்முருகன், கே.நித்தியானந்தன், தமிமுன் அன்சாரி, பழ.ஆசைத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் கே.பாலகிருஷ்ணன், திருமதி உ.வாசுகி, ஜி.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட நிருவாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தோழமைக்கட்சியின் நிருவாகிகள் கலந்துகொண்டனர்.

இதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவிற்கும், குறிப்பாக, மாநிலச் செயலாளர் தோழர் சண்முகம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த கூட்டத்தில் பங்கெடுத்திருக்கக் கூடிய நாம் மட்டுமல்ல; மனிதநேய சிந்தனை கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு மனிதரும் காசாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இனப்படுகொலையை கண்டித்துக் கொண்டிருக்கிறோம்.

**பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான ஆதரவு!**

பாலஸ்தீன மக்களுக்கு நம்முடைய மனிதாபிமான, மனித உரிமை ஆதரவை மனப்பூர்வமாக நாம் வழங்குகிறோம். இதுதான் இந்தக் கண்டண இயக்கத்தின் முழக்கமாக அமைந்திருக்கிறது!

கடந்த ஓராண்டாகவே, காசாவில் இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தாக்குதல்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதுவரையில், ஏறக்குறைய 11 ஆயிரம் பெண்கள் 17 ஆயிரம் குழந்தைகள் 175 பத்திரிக்கையாளர்கள் 125 ஐ.நா. ஊழியர்கள் என்று, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்;

26 ஆயிரம் குழந்தைகள் பெற்றோர்களை இழந்திருக்கிறார்கள்; ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் காயம் ஏற்பட்டு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், ஓராண்டில் காசாவின் பெரும்பகுதி அழிக்கப்பட்டுவிட்டது!

ஆனாலும், இஸ்ரேல் நாட்டின் ஆக்கிரமிப்பு கொள்கைக்கு எதிராக, பாலஸ்தீன மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

**இஸ்ரேல் இராணுவத்தின் கொடூரச் செயல்!**

அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு ஒரு சிறிய எடுத்துக் காட்டுச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த ஜூன் மாதத்தில், பட்டினியால் வாடக் கூடிய பாலஸ்தீனர்கள், உணவுப் பொருள் ஏற்றி வரும் லாரியை எதிர்பார்த்துக் காத்திருந்தபோது, 45 பேரை இஸ்ரேல் இராணுவம் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். உணவுக்காக காத்திருந்தவர்களின் உயிரையே பறித்திருக்கக்கூடிய இந்தக் கொடூரத்தை பார்த்து, எல்லோருடைய இதயமும் நொறுங்கி போயிருக்கிறது.

மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமையான இந்த அநீதிகளைக் கண்டிக்காமல் அமைதியாக கடந்து செல்ல யாருக்காவது மனது ஒப்புமா?

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் என்ற பெயரில்

# பா.ஜ.க.வின் தில்லுமுல்லுகளுக்கு தேர்தல் ஆணையம் துணை போகிறதா?

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு கண்டனம்!

**சென்னை, அக் 9 -**

**வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் என்ற பெயரில் செயல்படப் போவதாக தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதை பார்க்கும்போது, பா.ஜ.க.வின் தில்லுமுல்லுகளுக்கு தேர்தல் ஆணையம் துணை போகிறதா என்று கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அறிக்கை வருமாறு:-

SIR என்ற வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை அனைத்து மாநிலங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்திருக்கிறார். இந்தியா கூட்டணி சார்பில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் வாக்காளர் பட்டியல் முறைகேடு தொடர்பாக ஆதாரங்களோடு தொடர்ந்து எழுப்பிய கேள்விகளுக்குத் தேர்தல் ஆணையம் இதுவரை உரிய பதிலை அளிக்கவில்லை.

ஆட்சிகளை மாற்றுவது, அமைப்பது ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்களின் உரிமை. அதனைத் தேர்தல் ஆணையம் கையில் எடுப்பது, ஒன்றிய அரசுக்கு ஆதரவாகச் செயல்படுவது ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமம். அந்தச் செயலைத் தமிழ்நாடு நிச்சயம் அனுமதிக்காது.

**முதல்வர் தலைமையில் தமிழ்நாடு போராடும்!**

பீகாரைப் போலத் தற்போது SIR என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டம் ஏதேனும் செயல்படுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு முயன்றால், அதற்கு எதிராக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஒன்று சேர்ந்து போராடும். தமிழ்நாட்டு மக்களை நேர் நின்று வீழ்த்த முடியாத எதிரிகளும் துரோகிகளும் குறுக்கு வழியைக் கையாண்டு வென்றிடலாம் எனப் பகல் கனவு காண்கிறார்கள். அதற்குத் தமிழர்கள் தக்கப் பதிலடி கொடுப்பார்கள். SIR என்ற அநீதிக்கு எதிராகத் தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.



மோடி அரசு அமைந்த பிறகு தன்னாட்சி அதிகாரங்கள் கொண்ட சி.பி.ஐ, ஆர்.பி.ஐ, சி.ஏ.ஜி, என்.ஐ.ஏ, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை, நிதி ஆயோக் அமைப்புகள் ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறின. இந்த வரிசையில் தேர்தல் ஆணையமும் ஒன்றிய அரசின் கண் அசைவுக்கு ஏற்ப நடக்க ஆரம்பித்திருக்கிறது. தேர்தல் ஆணையம் தன் நடுநிலை தன்மையை இழந்துவிட்டதற்குத் தொடர்ச்சியாக நிறைய நிகழ்வுகள் நடந்து வருகின்றன.

**தேர்தல் ஆணையம் தவறி விட்டது!**

உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தல் தேதி முன் கூட்டியே பிரதமர் மோடிக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தான் முதல் கட்ட தேர்தல் நடந்த தமிழ்நாட்டில் பல்லடம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, சென்னை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் முன்னரே பிரச்சாரக் கூட்டங்களை

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### பீகார் தேர்தல்:

## காங்கிரஸ் தேர்தல் குழு ஆலோசனை!

*புதுடெல்லி, அக். 9 -*

பீகார் மாநிலத்தில் தேர்தலை முன்னிட்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் கமிஷன் மேற்கொண்டது. இதில் பல லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன.

இதனை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டித்து பெரிய போராட்டங்கள் நடத்தின. நாடாளுமன்றத்திலும் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் பீகார் மாநில சட்டசபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாநிலத்தில் மொத்தம் 243 சட்டசபை தொகுதிகள் உள்ள நிலையில் 2 கட்டமாக தேர்தல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி முதல்கட்டமாக 121 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6ந் தேதியும், 2ம் கட்டமாக 122 தொகுதிகளுக்கு 11ந் தேதியும் தேர்தல் நடக்கிறது. வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 14ம் தேதி நடக்கிறது.

இந்த நிலையில், பிகாரில் சட்டசபை தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு டெல்லியில் நேற்று கூடியது.

கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் வாக்காளர் திருத்த பட்டியல், தேர்தல் பணி, கள நிலவரம், தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை தேர்வு செய்வது உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டன. இதில் காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.